**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 10.03.2026**

**அரசு தரப்பு சாட்சி** : 16 (LW21)

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகானந்தம் | தொழில் | |
| தந்தை பெயர் | கருப்பையா | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( எதிரி ஆஜர் )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது கீழக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11.2023 ம் தேதியன்று திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது, திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலைய பொறுப்பு திருப்பாலைக்குடி காவல் ஆய்வாளர் அவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை காலை 06.00 மணிக்கு பெற்று, இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று அங்கு இராமநாதபுரம் மாவட்ட ஜமாத் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்ட வாகவயல் கிராமத்தை சேர்ந்த இறந்த



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.10 17:48:09 +0530

முனியசாமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக சவக்கிடங்கில் வைக்க நிலைய மருத்துவ அதிகாரியிடம் வேண்டுகோள் கடிதத்தை காலை 07.05 மணிக்கு கொடுத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

– இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.10 17:48:12 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .